[1975 அக்டோபர் 28

சாமல்பட்டி—விருதுவிளங்கினான் பேருந்துப்பணி

*104. வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாமல்பட்டியிலிருந்து திருவண்ணாமலை வழியாக விருது விளங்கினான் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டதா?

(இ) ஆம் எனில், அந்த வழித்தடத்தில் புதிய பஸ் விடுவதற்கு அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : தலைவரவர்களே, ஏற்கனவே அந்த விருதுவிளங்கினான் பகுதியில் 10 கிராமங்களுக்கு மேலிருக்கின்றன. நீண்ட காலம் முயற்சித்துத் தனியார் பஸ்ஸுக்கு ஏற்பாடு செய்து கொண்டுவந்தோம். தற்சமயம் 5 மைலுக்கு இந்தப் புறத்திலேயே பஸ்ஸை நிறுத்திவிடுகிறார்கள். எனவே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தை யாவது விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதைத் தந்தைபெரியார் போக்குவரத்துக் கழகம் ஆராயும்.

மையப் பேருந்து நிலையம் — மதுரை கிழக்கு இரயில் நிலையம் பேருந்துப்பணி

*105. வினா—திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில், மத்திய பேருந்து நிலையத்திற்கும், கிழக்கு மதுரை இரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையே பேருந்துப் பணியினைத் தொடங்கக் கோரி பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?